Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 58 / 2022

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | சரவணன் | Calling: | வண்டி வியாபாரம் |
| Father's/Husband's Name: | மோகன வேல் | Religion: | |
| Village: | பெரியபேட்டை | Age: | 53 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 06.06.2025

(எதிரி ஆஜர்)

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

நானும் எதிரியும் எத்தனை வருடமாக நன்பர்கள் என்றால் 3,4 வருடங்களாக நன்பர்கள். எதிரியின் முகவரி எனக்கு தெரியும் என்றாலும் எனது முகவரி எதிரிக்கு தெரியும் என்றாலும் சரிதான். எனது முகவரி என்னவென்றால் எண்.195, விஜயராகவன் தெரு, பெரியபேட்டை, வாணியம்பாடி. என் வீட்டின் பக்கத்தில் தான் சந்திரசேகரன் இருக்கிறாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நானும் சந்திரசேகரன் என்பவரும் இன்று காலை பேசிக்கொண்டிருந்தோமா என்றால் நான் நின்றுக் கொண்டிருக்கும் போது என்னிடம் மணி என்னவென்று கேட்டார் அதற்கு சொல்லிக்கொண்டிருந்தேன். சந்திரசேகர் என்பவர் விஜயராகவன் வீதியில் இருக்கிறாரா என்றால் அவர் எந்த சந்திரசேகரை கேட்கிறார் என்று எனக்கு தெரியவில்லை. சாமிநாதன் என்பவரின் மகன் சந்திரசேகர் என்பரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரிக்கு நான் பணம் கொடுக்கும் போது சாட்சிகள் யாரேனும் இருந்தாரா என்றால் இல்லை. என்னுடைய கடையில் வைத்து எதிரிக்கு பணம் கொடுத்தேனா என்றால் இல்லை வீட்டில் வைத்து கொடுத்தேன். காசோலையை எதிரி எந்த தேதியில் என்னிடம் கொடுத்தார் என்றால் 11.11.2021. 11.11.2021 காசோலையை பெற்று வங்கியில் செலுத்தினேன். 20.11.2021 ஆம் தேதி வங்கியில் இருந்து திருப்பபட்டது.

காசோலை திருப்பபட்டதும் எதிரியிடம் நான் கேட்டேனா என்றால் நான் அவருக்கு போன் செய்தேன், அவர் எடுக்கவில்லை. அதன் பிறகு தான் வழக்கறிஞரிடம் கூறி சட்ட அறிவிப்பை அனுப்பினேன். எதிரி பதில் அறிவிப்பு ஏதேனும் அனுப்பினாரா என்றால் காலதாமதமாக அனுப்பினார். அதில் இருந்த சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தேவையில்லாதது அதனால் அதை கண்டுக்கொள்ளவில்லை. இவ்வழக்கு காசோலையை தவறாக பயன்படுத்தி உள்ளதாக வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் எதிரி புகார் கொடுத்த விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி புகார் கொடுத்தது சம்மந்தமாக காவல் நிலையத்தில் என்னை விசாரித்தார்கள் என்றாலும் நான் அந்த பணம் என்னுடையது அல்ல என்று கூறியிருக்கிறேன் என்றாலும் அந்த பணம் சந்திர சேகர் என்பவருடையது என்று கூறியிருக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் கையிருப்பு பணமாக 8 லட்சம், 10 லட்சம் வைத்திருப்பேனா என்றால் 8 லட்சம் ரூபாய் வரை கையிருப்பாக வைத்திருப்பேன். 11.10.2021 மற்றும் 11.11.2021 ஆகிய நாட்களில் 10 லட்சம் ரூபாய் என்னிடம் இருந்ததா என்றால் 8 லட்சம் ரூபாய் வரை என்னிடம் பணம் இருந்தது.

வங்கியிருப்பா கையிருப்பா என்றால் கையிருப்பாக இருந்தது. நான் வங்கி பரிவர்த்தனைகள் வைத்துக்கொள்வதில்லையா என்றால் ஓரளவு வைத்துள்ளேன். ஓரளவு எவ்வளவு என்றால் 50 ஆயிரம் முதல் 1 லட்சம் வரை வைத்துள்ளேன். நான் வியாபாரம் செய்வதற்கு அரசாங்க உரிமம் வைத்துள்ளேனா என்றால் இல்லை. 8 லட்சம் ரூபாய் வரை வைத்திருப்பது வருமான வரிச்சட்டப்படி தவறு என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் வருமான வரியை தாக்கல் செய்கிறேனா என்றால் பழைய வாகனங்களை வாங்கி விற்பதால் வருமான வரி செலுத்தவில்லை. மேற்கூறிய காரணத்திற்கு வருமான வரி செலுத்த தேவையில்லை என்று சட்டத்தில் கூறப்பட்டு உள்ளதா என்றால் தெரியாது. எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறார். எதிரியிடம் நான் நிலம் ஏதேனும் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. இந்த நான்கு வருடத்தில் எதிரிக்கும் எனக்கும் கொடுக்கல் வாங்கல் உள்ளதா என்றால் இந்த ஒரு முறை மட்டும் தான் இருந்தது. எனது வருட வருமானம் எவ்வளவு என்றால் 5 லட்சம் ரூபாய். முதலீடு எவ்வளவு என்றால் 2 லட்சம் ரூபாய். எந்த வருடத்தில் நான் எதிரிக்கு வண்டியை விற்றேன் என்றால் 2017, எவ்வளவு ரூபாய்க்கு என்றால் 30000 ரூபாய்க்கு விற்றேன் . நான் எதிரிக்கு விற்பனை செய்த வண்டியின் மூலம் எவ்வளவு லாபம் ஈட்டினேன் என்றால் 1500 ரூபாய் ,வண்டிக்கு ஏற்றவாறு மாறும். மாதத்திற்கு எத்தனை வண்டி விற்பேன் என்றால் 20 முதல் 30 வண்டி விற்பேன். அக்டோபர் மாதம் 2021 ல் எத்தனை வண்டிகள் விற்பனை செய்தேன் என்றால் நான் அதுக்குறித்து எந்த ஆவணங்களும் வைத்துக்கொள்வதில்லை.

ஆவணங்கள் வைத்தால் விற்பனை வரிகட்டவேண்டும் என்பதற்காக ஆவணங்கள் ஏதும் நான் வைத்துக்கொள்வதில்லை என்றால் எனக்கு அதுக்குறித்து தெரியாது. நான் எதிரிக்கு கடன் கொடுத்த விவரத்தை ஏதேனும் ஆவணங்களில் குறித்துவைத்துள்ளேனா என்றால் வீட்டில் கொடுத்ததால் ஏதுவும் குறித்துவைக்க வில்லை. கடன் வாங்கும் போது எதிரி ஏதேனும் ஆவணங்கள் கொடுத்தாரா என்றால் இல்லை. வேறு எப்போதாவது கொடுத்தாரா என்றால் நான் பணத்தை திருப்பிகேட்கும் போதுதான் காசோலையை என்னிடம் கொடுத்தார். எத்தனை காசோலை கொடுத்தார் என்றால் ஒரு காசோலை கொடுத்தார். அதில் என்ன எழுதி இருந்தது என்றால் எனக்கு சேரவேண்டி பணம் 6 லட்சம் தொகையை மட்டும் எழுதியிருந்தது. வேறு ஏதேனும் காசோலையில் எழுதியிருந்ததா என்றால் வங்கியில் செலுத்தி பணம் எடுக்கும் படி எழுதியிருந்தது. காசோலையில் account payee என எழுதி இரண்டு கோடிட்டு இருந்ததா என்றால் account payee என எழுதியிருந்தது. இரண்டு கோடா ஒரு கோடா என்று நினைவில்லை. எனது பேரில் காசோலையில் எழுதியிருந்தது. வேறு ஏதேனும் காசோலையில் எழுதியிருந்ததா என்றால் அவரது கையெழுத்து மட்டும் போட்டிருந்தது. கையெழுத்து இருபுறமும் போட்டிருந்ததா என்றால் முன்புறம் மட்டும் தான் போட்டிருந்தது. காசோலையின் எண் என்னவென்றால் 000138. வேறு ஏதேனும் எண் காசோலையில் இருந்ததா என்றால் இருந்திருக்கும் எனக்கு நினைவில்லை. எதிரி காசோலை எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றாலும் கையெழுத்து போடவில்லை என்றாலும் அதில் உள்ள விவரங்களை நானே பூர்த்தி செய்துக்கொண்டுள்ளேன் என்றாலும் சரியல்ல.

இது சம்மந்தமாக வழக்கின் காசோலையை கையெழுத்து பரிசோதனைக்காக நிபுணருக்கு அனுப்புவதற்கு எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் உள்ளது. ஏனென்றால் என் எதிரில் அவரே நேரடியாக கையெழுத்து போட்டு பூர்த்தி செய்துக்கொடுத்ததால் ஆட்சேபனை உள்ளது.புகார்தாரர் அரசாங்க விதிகளுக்கு உட்பட்டு வியாபாரம் பதிவு எதுவும் செய்யாமல் இருப்பதால் சட்டபடி குற்றம் என்பதாலும் வருமான வரி முறையாக செலுத்தாமல் இருப்பது புகார்தாரர் உடைய பைனான்சியல் கெபாசிட்டி பற்றி உரிய துறைகளுக்கு மனு செய்து விவரம் கேட்பதற்காக உங்களுக்கு ஆட்சேபனை ஏதேனும் உள்ளதா என்றால் ஆட்சேபனை உள்ளது. மேற்படி காசோலை தற்போதைய புகார்தாரருக்கு சம்மந்தம் இல்லாதது என்றும் சாமிநாதன் மகன் சந்திரசேகர் என்பவருக்கு சம்மந்தபட்டது என்பதையும் எதிரி 315 கு.வி.மு.ச படி தாக்கல் செய்ய ஆட்சேபனை ஏதேனும் உள்ளதா என்றால் எனது வழக்கிற்கு சம்மந்தம் இல்லாத நபரின் பெயரை குறிப்பிடுவதால் ஆட்சேபனை உள்ளது. எதிரியின் மீது தாக்கல் செய்யபட்ட இந்த வழக்கு பொய்யானது என்றால் இல்லை, மறுக்கிறேன்.

சாட்சி கையொப்பம்

(ஒம்.) சரவணன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K